Source: *Tamil Murasu*, p3
Date: 12 February 2017

# உள்ளூர் பல் மருத்துவர்கள் பற்றாக்குறை

அதிகரித்து, மூப்படைந்து வரும் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்திசெய்ய பயிற்சி அளிக்கப்பட்ட உள்ளூர் பல் மருத்துவர்களின் எண்ணிக்கை போதாததால் வெளிநாட்டு பல் மருத்துவர்களும் வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற உள்ளூர் பல் மருத்துவர்களும் இங்கு பணிக்குச் சேர்க்கப்படுகின்றனர்.

அண்மைய ஆண்டுகளில், ஒவ்வோர் ஆண்டும் பதிவு செய்யப்பட்ட புதிய பல் மருத்துவர்களில் உள்ளூரில் பயிற்சி பெற்ற பல் மருத்துவர்களின் எண்ணிக்கை பாதிக்கும் குறைவாக உள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டில் புதிதாக பதிவு செய்யப்பட்ட பல் மருத்துவர்களில் 75 விழுக்காட்டினர் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள்.

பல் மருத்துவர்களின் தேவையைப் பூர்த்திசெய்ய சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவத் துறை கடந்த ஆண்டு 54 மாணவர்களைச் சேர்த்ததாகவும், 2010ஆம் ஆண்டின் எண்ணிக்கையைவிட அது ஆறு மாணவர்கள் அதிகம் என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார். இன்னும் மூன்றாண்டுகளில் பல் சுகாதாரத்திற்கான தேசிய பல்கலைக்கழக மையம் திறக்கப்பட்டதும் வருடாந்தர மாணவர் சேர்க்கை 80ஆக உயரும். கடந்த 2010ஆம் ஆண்டுக்கும் கடந்த ஆண்டுக்கும் இடையில் பல் மருத்துவர்களின் எண்ணிக்கை 40% அதிகரித்தது. இப்போது இங்கு சுமார் 2,200 பல் மருத்துவர்கள் உள்ளனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.